මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No .

දිනය
திகதி
Date.

# ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
# Human Rights Commission of Sri Lanka

செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சு,
2 ஆம் மாடி,
கொழும்பு 05

**தனியார் துறையில் பணியாற்றுபவர்களுக்கு 2020 பாராளுமன்ற தேர்தலின்போது சம்பளத்துடனான தனிப்பட்ட விடுமுறைகள் குறைக்கப்படாமல் தமது வாக்கை அளிப்பதற்கு முடியுமான வகையில் விடுமுறை பெற்றுக்கொடுத்தல்**

அரசியலமைப்பு சட்டத்தின் ஏற்பாடுகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதி செய்யும் நோக்கில் அந்த சட்டங்கள் மற்றும் உரிமைகளுக்கு மதிப்பளித்தல், அதனை ஊக்குவிப்பதற்க்காக நிறைவேற்று அதிகாரம், நிர்வாக நடைமுறைகள் சம்பந்தமாக அவதானித்து சட்டம் மற்றும் நிர்வாக ரீதியிலான அலுவல் நடைமுறைகளை தயாரிக்கும்போது அரசாங்கத்திற்கு தேவையான ஆலோசனைகளை பெற்றுக்கொடுத்தல், ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் அந்த நடைமுறைகளை உரிய பிரகாரம் ஏற்புடைய நிறுவனங்கள் நடைமுறைபடுத்துகின்றனவா? என்பது சம்பந்தமாக மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தேவையான அனைத்து விடயங்களையும் மேற்கொள்வதற்கு 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் தேவையான அதிகாரங்கள் எமது ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2014 டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழில் அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் நாயகம் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரின் பங்கேற்புடன் தனியார் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தேசிய தேர்தல்களின்போது சம்பளத்துடனான தனிப்பட்ட விடுமுறைகள் குறைக்கப்படாமல் தமது வாக்கை அளிப்பதற்கு முடியுமான வகையில் விடுமுறை பெற்றுக்கொடுத்தல் சம்மந்தமான விசேட கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. அக்கலந்துரையாடலின் அடிப்படையில் 2015 ஜனவரி மாதம் 08 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலின் போது தனியார்துறை பணியாளர்களுக்கு தமது வாக்கை அளிப்பதற்காக 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் ஆணையாளரால் தனியார்துறை பணியாளர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டிய விடுமுறை காலப்பகுதி பற்றிக் குறிப்பிடப்பட்ட 2014.12.23 ஆம் திகதிய கடிதம் இந்த ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 2015 ஜனவரி மாதம் 08 ஆம் திகதி தனியார்துறை பணியாளர்களுக்கு விடுமுறை பெற்றுக்கொடுத்தல் சம்பந்தமான அறிவித்தல் தங்களுடைய திணைக்களத்தினால் செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்தது.


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ප්‍රධාන කාර්යාලය<br>தலைமைக் காரியாலயம்<br>Head Office | 14, ආර්. ඒ. ද. මෙල් මාවත, කොළඹ - 04.<br>14, ஆர்.ஏ.த.மெல் மாவத்தை, கொழும்பு-04.<br>14, R.A.De Mel Mawatha, Colombo - 04. | සභාපති<br>தவிசாளர்<br>Chairperson | 011-2505451 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 011 2505541/74 | විද්‍යුත් තැපැල<br>மின்னஞ்சல்<br>E-mail | sechrcsl@gmail.com |
| දුරකථන<br>தொலைபேசி<br>Telephone | 94-11- 2505580/81/82 | ලේකම්<br>செயலாளர்<br>Secretary | 011-2505521 | ක්ෂණික<br>துரித அழைப்பு<br>Hotline | 011-2505575<br>1996 | වෙබ්<br>இணையம்<br>Web | www.hrcsl.lk |

அதற்கினங்க, மேலே குறிப்பிடப்பட்ட சனாதிபதித் தேர்தலின்போது தமது சர்வஜன வாக்குரிமையை தனியார் துறை பணியாளர்களுக்கு தடையின்றி பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. இம்முறை நடைபெறும் பாராளுமன்றத் தேர்தலின்போதும் ”எவரும் கைவிடப்படாத பாராளுமன்றத் தேர்தலை உறுதி செய்வோம்” எனும் தொனிப்பொருளில் பிரஜைகளின் இறைமையை வாக்களிப்பு ஊடாக செயல்வலுப்பெறச்செய்வதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. பிரஜைகளின் இறைமையை உறுதி செய்வதற்காக தனியார் துறை பணியாளர்களுக்கு தேசிய தேர்தல்களின்போது சம்பளத்துடனான அவர்களது தனிப்பட்ட விடுமுறைகள் குறைக்கப்படாமல் தமது வாக்கை அளிப்பதற்கு முடியுமான வகையில் விடுமுறையை பெற்றுக்கொடுப்பதற்கான பத்திரிகை அறிவித்தல் ஒன்றை பிரசுரித்தல் போன்ற தலையீட்டை மேற்கொள்ளுதல் பொருத்தமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்படுகின்றது. அதற்கிணங்க தங்களது அமைச்சு இந்த விடயம் தொடர்பாக துரித நடவடிக்கையை மேற்கொள்ளுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது.

2014 டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலை அடிப்படையாகக்கொண்டு தனியார் துறை பணியாளர்களுக்கு தேசிய தேர்தல்களின்போது சம்பளத்துடனான அவர்களது தனிப்பட்ட விடுமுறைகள் குறைக்கப்படாமல் தமது வாக்கை அளிப்பதற்கு முடியுமான வகையில் விடுமுறையை பெற்றுக்கொடுத்தல் சம்பந்தமான செயல்முறையொன்று உள்ளடங்கிய தேர்தல் ஆணையாளரின் 2014.12.23 ஆம் திகதிய கடிதத்தின் பிரதி மற்றும் இது சம்பந்தமாக தொழில் அமைச்சினால் சிங்களம்/ தமிழ் / ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தல்களின் பிரதிகளையும் தங்களுடைய தயவான கவனத்திற்கு இத்துடன் இணைத்து அனுப்புகின்றோம்.

கலாநிதி தீபிக்கா உடகம
தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

2020 யூலை மாதம் 13 ஆம் திகதி

பிரதி - தவிசாளர்,
இலங்கை தேர்தல் ஆணைக்குழு.